


நாமக்கல் மேற்கு மாவட்ட செயற்குழு கூட்டம் திருச்செங்கோடு, வேலூர் ரோடு சி.ஹச்.பி காலனியில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட கழக அவை தலைவர் இரா.நடனசபாபதி தலைமையில் நடைபெற்றது. நாமக்கல் மேற்கு மாவட்ட கழக செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் சிறப்புரையாற்றினார்.

### மாவட்டச் செயலாளர் மதுரா செந்தில் சிறப்புரை!

# நாமக்கல் மேற்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம்!

## பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றம்!

நாமக்கல், அக்.19-

நாமக்கல் மேற்கு மாவட்ட செயற்குழு கூட்டம் 17.10.2024 வியாழக்கிழமை காலை 11.00 மணிக்கு திருச்செங்கோடு, வேலூர் ரோடு சி.ஹச்.பி காலனியில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட கழக அவை தலைவர் இரா.நடனசபாபதி தலைமையில் நடைபெற்றது. நாமக்கல் மேற்கு மாவட்ட கழக செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் சிறப்புரையாற்றினர்.

முடிவில் மாவட்ட கழக செயலாளர் அவர்கள் தலைமை கழகத்தில் அறிவிக்கப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையில் நடைபெற்ற கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை விளக்கிப் பேசினார்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் :

தீர்மானம் - 01 இளந்தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை பெருமை தமிழ்நாட்டின் துணை முதலமைச்சராக பணியாற்ற வாய்ப்பளித்த கழக தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நாமக்கல் மேற்கு மாவட்ட கழகத்தின் சார்பாக நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

தீர்மானம் - 02 முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் கொள்கை வாய்ப்பு கழக தலைவர் முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டி முரசொலி மாறன் அவர்களின் சகோதரர் முரசொலி நாளிதழின் முன்னாள் ஆசிரியருமான திரு.முரசொலி செல்வம் அவர்களுக்கு இறங்கல் தீர்மானம் நிறை வேற்றப்படுகிறது.

தீர்மானம் - 03 நாமக்கல், பொம்மைகுட்டை மேட்டில் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கவும், புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டவும், முடிவடைந்த திட்டங்களை திறந்து வைக்கவும் வருகை தரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு சிறப்பான வரவேற்பு அளிக்க வேண்டும் என தீர்மானிக்கப்படுகிறது.

தீர்மானம் - 04 கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்பட்டி நாமக்கல் மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட ஊராட்சிகள் தோறும் பொது உறுப்பினர் கூட்டம் நடத்தி கழக பொது உறுப்பினர் அட்டை வழங்க வேண்டும் என தீர் மானிக்கப்படுகிறது.

இக்கூட்டத்தில் பரமத்தி வேலூர் தொகுதி பொறுப்பாளரான மாநில அயலக அணி துணைச் செயலாளர் உமாராணி, திருச்செங்கோடு தொகுதி பொறுப்பாளரான சேலம் கிழக்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் அ.சீனிவாசன், குமாரபாளையம் தொகுதி பொறுப்பாளரான மாநில கொள்கைப் பரப்பு இணை செயலாளர் வி.சி.சந்திரகுமார், ஒன்றிய கழக செயலாளர்கள் கே.செல்வராசு, கு.பழனிவேல், ஜி.தங்கவேல், பி.பி.தனராசு, கே.கே.சண்முகம், எம்.தங்கவேல், ஏ.பி.ஆர்.சண்முகம், என்.நாச்சிமுத்து, ஆர்.செல்வம், ஆ.இளங்கோ வன், நகர கழக செயலாளர்கள் டி.கார்த்திகேயன், அ. குமார், டி.விஜயகண்ணன், எஸ்.ஞானசேகரன் பேரூர் கழக செயலாளர்கள் மு. திருமலை, ஆர்.கருணாநிதி, எம்.ரமேஷ் பாபு, பி.முருகன், எம்.ராமலிங்கம், பி. முருகவேல், எஸ்.ராமமூர்த்தி, எஸ்.பி.கார்த்திராஜ், மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் வி.ஜி.அன்பழகன், கே.மயி ல்சாமி, எம்.சாந்தி, பொருளாளர் எம்.ராஜாராம், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் எம்.வெங்கடாசலம், ஆர்.நடேசன், டி.ரங்கசாமி, ஓ.ஆர்.செல்வராஜ், பொதுக்குழு உறுப்பினர்கள் ஏ.ரவிச்சந்திரன், திருநாவுக்கரசு (எ) எஸ்.ஆர்.பழனியப்பன், பி.பி.சாமிநாதன், பி.சிவக்குமார், ஆர்.வேலுமணி, எம்.இந்திராணிமயில்சாமி, திருச்செங்கோடு நகர்மன்ற தலைவர் நளினிசுரேஷ் பாபு, பள்ளிபாளையம் நகர்மன்ற தலைவர் செல்வராஜ், துணை தலைவர்கள் வெங்கடேசன், பாலமுருகன், பேரூராட்சி மன்ற தலைவர்கள் ராதாமணி, மணி, சோமசேகர், துணை தலைவர் ராஜா, மாவட்ட சார்பு அணி தலைவர்கள் அ ம் பி க ா ப ா ண் டி ய ன் , அருள்செல்வி, முரளி, அருண், மாப்பிள்ளை மீரான், பழனிவேலு, சரவண சுந்தரம், மணி (எ) மாரப்பன், சுப்ரமணியம், தமிழரசு, ராஜமாணிக்கம், தர்மராஜன், மீன் செல்வன், ஆனந்தன், மாதேஸ்வரன், முருகையன், மனோகரன், சுரேஷ்பாபு, அமைப்பாளர்கள் கௌதம், ரமேஷ், ஜோதி, ராதிகா, சரவணமுருகன், பெரியசாமி, சேக்தாவுத், ராஜவேல், ராஜவேலு, பாலாஜி, சுரேஷ்குமார், கண்ணன், ரவிமோகன், கந்தசாமி, சாதிக்பாட்ஷா, ரங்கசாமி (எ) குமார், பூபதி, கிரிசங்கர், மணியம், கருணாகரன், ரவிச்சந்திரன், தனகரன், பாலசுப்ரமணியம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### தி.மு.க. சுற்றுச்சூழல் அணி

## தென்காசி வடக்கு மாவட்ட துணை அமைப்பாளர்கள் நியமனம்!

**சுற்றுச்சூழல் அணிச் செயலாளர் கார்த்திகேய சிவசேனாபதி அறிவிப்பு!**

தென்காசி வடக்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளராக நியமிக்கப்பட்ட கொ.பிரகாஷ், தான் வகித்து வந்த பொறுப்பிலிருந்து விடுவித்துக் கொண்ட காரணத்தால், அவருக்குப் பதிலாக **ஜெ. ஜலால்மைதீன்** (42, தமிழ் குடில், காயிதேமில்லத் 2வது தெரு, சங்கரன்கோவில், தென்காசி மாவட்டம்) அவர்கள் தென்காசி வடக்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளராகவும்;

மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளராக நியமிக்கப்பட்ட சேதுசுப்பிரமணியன் அவர்கள் பேரூர்க் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்ட காரணத்தால், அவரை மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக, ரா. மகேஷ்குமார் (203/2, மேற்குத் தெரு, குவளைகண்ணி, சங்கரன்கோவில், தென்காசி மாவட்டம்) தென்காசி வடக்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளராகவும் நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட அணி நிர்வாகிகளுடன் இவர்கள் இணைந்து பணியாற்றுவார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"** **கார்த்திகேய சிவசேனாபதி,**
சென்னை - 18 செயலாளர்,
நாள்- 18.10.2024 தி.மு.க. சுற்றுச்சூழல் அணி




சென்னை தெற்கு மாவட்டம், அயப்பாக்கம் ஊராட்சியில் வடகிழக்கு பருவ மழை முன்னெச்சரிக்கைக்கான துண்டுப் பிரசுரங்களை ஊராட்சி மன்றத் தலைவர், ஒன்றியக் கழகச் செயலாளர் அ.ம.துரை வீரமணி ஏற்பாட்டில் தயார் செய்து அனைத்து வீடுகளுக்கும் வழங்கப்பட்டது.

### தி.மு.க. 15ஆவது பொதுத்தேர்தல்:

## சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலாப்பூர் கிழக்கு பகுதி துணைச் செயலாளர் - மாவட்ட பிரதிநிதி ஆகிய பொறுப்புகளுக்கான தேர்தல் முடிவு!

**தலைமைக் கழக அறிவிப்பு!**

“திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில், சென்னை தென்மேற்கு மாவட்டம், மயிலாப்பூர் கிழக்கு பகுதி துணைச் செயலாளராக (பொது) தேர்ந்தெடுக்கப்பட்ட பா.கார்த்திகேயன் (எ) மா.பா.அன்பு 124அ-வது வட்டக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப் பட்டதாலும் - மாவட்ட பிரதிநிதிகளாக தேர்ந்தெடுக்கப்பட்ட வி.நடராஜன், கே.கந்தவேல், சி.மாறன் ஆகியோர் மறைவெய்திய காரணத்தால்; சென்னை தென்மேற்கு மாவட்டம், மயிலாப்பூர் கிழக்கு பகுதி துணைச் செயலாளர் (பொது) பொறுப்பு மற்றும் 3 (மூன்று) மாவட்ட பிரதிநிதிகள் பொறுப்புகளுக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2024, **அக்டோபர் 10 (வியாழக் கிழமை) அன்று ரூ.1000/–வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்** என தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டதையொட்டி;

சென்னை தென்மேற்கு மாவட்டம், மயிலாப்பூர் கிழக்கு பகுதி துணைச் செயலாளர் (பொது) பொறுப்புக்கு சீமேன் கோ.சேகர் - மூன்று மாவட்ட பிரதிநிதிகள் பொறுப்புகளுக்கு டி.மோகன்ராஜ், வே.விஜயகுமார், வீ.அருண்குமார் ஆகிய மூன்று பேர் மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்திருந்த காரணத்தால், அவர்களது மனு ஏற்கப்பட்டு,

**சென்னை தென்மேற்கு மாவட்டம், மயிலாப்பூர் கிழக்கு பகுதி துணைச் செயலாளராக (பொது) சீமேன் கோ.சேகர்,** 189, நொச்சிகுப்பம், காமராஜர் சாலை, மயிலாப்பூர், சென்னை-600004 அவர்களும்;

**சென்னை தென்மேற்கு மாவட்டம், மயிலாப்பூர் கிழக்கு பகுதி, மாவட்ட பிரதிநிதிகளாக**

**டி.மோகன்ராஜ்,** 45/38, வன்னியம்பதி தெரு, ஆர்.ஏ.புரம், சென்னை - 600 028.

**வி.விஜயகுமார்,** 170/40, ராஜா கிராமணி தோட்டம், மந்தைவெளி, சென்னை - 600 028.

**வி. அருண்குமார்,** 39/23, சாரதாபுரம் 2வது தெரு, மயிலாப்பூர், சென்னை-600 004. ஆகியோரும் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

**"அண்ணா அறிவாலயம்"** **துரைமுருகன்**
சென்னை - 18 பொதுச் செயலாளர்,
நாள்- 18.10.2024 தி.மு.க.



திருவள்ளூர் மாவட்டம் பூவிருந்தவல்லி ஒன்றியத்துக்குட்பட்ட குத்தம்பாக்கம் ஊராட்சியில் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கலைஞர் நூற்றாண்டு புதிய நூலகத்தை பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழும் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் ஆகியோர் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து நூலகத்தில் அமைக்கப்பட்டுள்ள புத்தகங்களைப் பார்வையிட்டனர். மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.த.பிரபுசங்கர், திருவள்ளூர் நாடாளுமன்ற உறுப்பினர் சசிகாந்த் செந்தில், பூவிருந்தவல்லி சட்ட மன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, மாவட்ட ஊராட்சி குழு துணை தலைவர் டி.தேசிங்கு, ஆவடி மேயர் ஜி.உதயகுமார், மாநில மாணவர் அணி இணைச் செயலாளர் சி.ஜெரால்டு, மாவட்ட துணைச் செயலாளர் எஸ்.ஜெயபாலன், ஒன்றிய செயலாளர் ப.ச.கமலேஷ், ஒன்றிய குழு துணை தலைவர் பரமேஸ்வரி கந்தன், ஒன்றிய கவுன்சிலர் என்.பி.மாரிமுத்து, உள்பட அரசு அதிகாரிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளனர்.

### சென்னை தென் மேற்கு

# மாவட்டக் கழக செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. அறிவிப்பு!

சென்னை, அக்.19-

சென்னை தென்மேற்கு மாவட்டக் கழக செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் நாளை (20.10.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் சிரிங்கேரி மடம் சாலையில் உள்ள மகிழ் கன்வென்ஷன் ஹாலில் (மயிலை கிழக்கு பகுதி அலுவலம் முதல்மாடியில்) மாவட்ட அவைத்தலைவர் அ.சந்திரசேகர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில், நாடாளுமன்ற உறுப்பினர், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்டத்திற்குட்பட்ட மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், தலைமைகழக தொகுதி பார்வையாளர்கள், பகுதிச்செயலாளர்கள், வட்டச்செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாமன்ற உறுப்பினர்கள், மற்றும் அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் ஆகியோர் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுகொள்கிறேன்.

பொருள்: துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா, 29.10.2024 அன்று வாக்காளர் பட்டியல் வெளியிட்டவுடன் வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் பணிகள், கழக ஆக்கபணிகள்

இவ்வாறு சென்னை தென்மேற்கு மாவட்ட செயலாளர் மயிலை த. வேலு எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார்.

### தமிழ்த்தாய் வாழ்த்துக்கு அவமரியாதை!

# ஆளுநருக்கு ஆதித்தமிழர் பேரவை கண்டனம்!

## இரா.அதியமான் அறிக்கை!

சென்னை, அக்.19-

ஆதித்தமிழர் பேரவை நிறுவனத் தலைவர் இரா. அதியமான் விடுத்துள்ள கண்டன அறிக்கை வருமாறு:-



சமூக சீர்திருத்த நடவடிக்கையால் சமத்துவமிக்க மண்ணாக செழுமைபடுத்தியதில் திராவிட இனமும் நிலமும் இந்தியாவின் முதன்மைப் பங்கு வகிக்கிறது என்பதை நாள் தோறும் மறைக்கின்ற வேலையைச் செய்கின்ற திட்டமிட்டு செய்து வரும் ஆளுநர் ஆர். என்.ரவிக்கு ஆதித்தமிழர் பேரவை வன்மையான கண்டனத்தை தெரிவிக்கின்றது.

தான் பங்கேற்கும் நிகழ்ச்சிகளில் தமிழ்தாய் வாழ்த்தில் கூட “திராவிடம்” என்ற வார்த்தையை தவிர்த்து விட்டு பாடுவதென்பது ஆளுநர் உடல் முழுவதும் ஒவ்வாமை அல்ல அது விசமாக பரவி புரையோடிக் கிடக்கிறது என்பது அப்பட்டமாக தெரிகின்றது.

உணர்வுகளையும் மரபுகளையும் மதிக்காத ஒரு நபரான ஆளுநரை தொடர்ந்து ஆளுநராக நீடிக்க வைப்பது, அவர் பேசும் பேச்சில் மூலம் குளிர் காய்வதென்பது ஒரு பதற்றத்தை கட்டமைக்க முயல்வது பேராபத்திற்குரியது.

ஆகையால் மரபுகளை மதிக்காத ஆளுநர். தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளை நசுக்குகின்ற வேலையை தொடர்ந்து செய்து வரும் ஆளுநர் ஆர். என்.ரவி அவர்களை கண்டிப்பதோடு அவரை உடனடியாக ஒன்றிய அரசு திரும்பப் பெற வேண்டுமென ஆதித்தமிழர் பேரவை வலியுறுத்துகிறது.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### தி.மு.க. 15ஆவது பொதுத்தேர்தல்:

## சென்னை தென்மேற்கு மாவட்டம் தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் முடிவு!

**தலைமைக் கழக அறிவிப்பு!**

“திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில், சென்னை தென்மேற்கு மாவட்டம், தலைமைச் செயற்குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட திருமதி ஷீபாவாசு மறைவெய்திய காரணத்தால்; சென்னை தென்மேற்கு மாவட்டம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2024, அக்டோபர் 10 (வியாழக்கிழமை) அன்று ரூ.25000/- வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.” என தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டதையொட்டி;

சென்னை தென்மேற்கு மாவட்டம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்புக்கு சு.வில்லவன் அவர்கள் மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்திருந்த காரணத்தால், அவரது மனு ஏற்கப்பட்டு,

**சென்னை தென்மேற்கு மாவட்டம், தலைமைச் செயற்குழு உறுப்பினராக, சு.வில்லவன்,** 22/43, சீதாம்மாள் சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

**"அண்ணா அறிவாலயம்"** **துரைமுருகன்**
சென்னை - 18 பொதுச் செயலாளர்,
நாள்- 18.10.2024 தி.மு.க.



திராவிட முன்னேற்றக் கழகத்தின் 75 வது பவள விழா மற்றும் முப்பெரும் விழாவையொட்டி சென்னை கிழக்கு மாவட்டம், திரு.வி.க. நகர் வடக்கு பகுதி, 74 (அ) வட்டம், புதியவாழைமா நகர் பகுதியில் மாவட்டக் கழகச் செயலாளர், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் துறைத் தலைவருமான பி.கே.சேகர்பாபு ஆலோசனைப்படி, சென்னை கிழக்கு மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளரும், தலைமை பொதுக் குழு உறுப்பினருமான லயன் பி.உதயசங்கர் இரண்டு நபர்களுக்கு மூன்று சக்கர மிதிவண்டியினை வழங்கினார். உடன் கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.